செ.வெ.எண்.29 நாள்: 09.06.2021

**தூத்துக்குடி மாவட்டம் கயத்தாறு வட்டம் ஆசூர் பஞ்சாயத்தில் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டு வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டவர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.கி.செந்தில்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் நேரில் சந்தித்து ஆய்வு செய்தார்.**

---

தூத்துக்குடி மாவட்டம் கயத்தாறு வட்டம் ஆசூர் பஞ்சாயத்தில் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டு வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டவர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.கி.செந்தில்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் இன்று (09.06.2021) நேரில் சந்தித்து ஆய்வு செய்தார். மேலும், கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகள் மற்றும் பஞ்சாயத்தில் கொரோனா தொற்று பரவல் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.கி.செந்தில்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தூத்துக்குடி மாவட்டத்தில் ஒவ்வொரு பஞ்சாயத்திலும் கொரோனா தொற்றினை கட்டுப்படுத்துவதற்காக சுகாதாரத்துறை மட்டும் அல்லாமல் பஞ்சாயத்து, ஊரக வளர்ச்சித்துறை மற்றும் வருவாய்த்துறை இணைந்து பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. அந்த குழுவினர் தினமும் வீடுவீடாகச்சென்று கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டு வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டவர்கள், கொரோனா தொற்று பரிசோதனை செய்து பரிசோதனை முடிவிற்காக காத்திருப்பவர்கள், காய்ச்சல் பாதிக்கப்பட்டு சுகாதார நிலையங்களுக்கு செல்பவர்கள் ஆகியவர்களின் விபரங்களை சேகரித்து கண்காணிக்கப்படுகிறது. அதேபோல், மருந்தகங்களில் பாராசிட்டமால் மாத்திரைகள் வாங்குபவர்களையும் கண்காணிக்கப்படுகிறது.

நமது மாவட்டத்தில் உள்ள பஞ்சாயத்து மற்றும் ஊரக பகுதிகளில் 3 அல்லது அதற்கு மேற்பட்ட கொரோனா தொற்று பாதிக்கப்பட்டவர்கள் உள்ள ஒவ்வொரு தெருக்களிலும் உள்ள அனைவருக்கும் காய்ச்சல் பரிசோதனை மற்றும் ஆக்சிஜன் அளவு பரிசோதிக்கப்படுகிறது. அதேபோல் காய்ச்சல், தலைவலி, வயிற்றுப்போக்கு உள்ளிட்ட அறிகுறிகள் உள்ளவர்களுக்கு தேவையான மருந்துகள் வழங்குவதற்கும், மேலும் அவர்களுக்கு அருகில் உள்ள அரசு மருத்துவமனைகளில் சிகிச்சைகள் அளிப்பதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது. கொரோனா தொற்றினை கட்டுப்படுத்துவதற்கு அரசு மேற்கொள்ளும் அனைத்து தடுப்பு நடவடிக்கைகளுக்கும் பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு அளித்து நமது மாவட்டத்தினை கொரோனா தொற்று இல்லாத மாவட்டமாக மாற்ற வேண்டும் என தெரிவித்தார்.

ஆய்வின்போது, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.கண்ணபிரான், உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.ஸ்ருதயஞ்ஜெய் நாராயணன், இ.ஆ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.லட்சுமணன், கோவில்பட்டி வருவாய் கோட்டாட்சியர் திரு.சங்கரநாராயணன், கோவில்பட்டி சுகாதார பணிகள் துணை இயக்குநர் மரு.அனிதா, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.அரவிந்தன், திருமதி.பானு மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.